# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட முதலாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு

2016/2017 (ஒக்டோபர் 2018)

## TL 1112 விமர்சன நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு

நேரம் : இரண்டு மணித்தியாலங்கள்

பகுதி – I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

### பகுதி – I

1. அ. இலக்கியத்தின் வரலாறு, இலக்கிய வழி வரலாறு ஆகியன பற்றிச் சுருக்கமாக விளக்குக. (10) புள்ளிகள்)

   ஆ. சங்ககால சமுதாய நிலை பற்றி எடுத்துரைக்குக. (10) புள்ளிகள்)

2. அ. சோழர்கால இலக்கியங்களை வகைப்படுத்திக் கூறுக. (05 புள்ளிகள்)

   ஆ.'சோழர்காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில்' ஓர் உன்னத காலமாக விளங்கியது' மதிப்பீடு செய்க. (15 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் இரண்டு பற்றி விளக்கக் குறிப்பு எழுதுக.
   i. பல்லவர் கால பக்தி இலக்கியங்களில் பக்தியுணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ள முறை
   ii. தமிழில் இரண்டாவது பக்தி யுகம்
   iii. ஐரோப்பியர் காலத்தில் தமிழ் இலக்கியத்தில் ஏற்பட்ட நவீன மாற்றங்களும் இதற்கான பின்புலமும்
   iv. இருபதாம் நூற்றாண்டில் நவீன கவிதையின் வளர்ச்சி (10x2=20 புள்ளிகள்)

### பகுதி – II

4. "களப்பிரர் காலம் இலக்கிய ரீதியில் பல்வேறுபட்ட வளர்ச்சிகளும் மாற்றங்களும் ஏற்பட்ட காலமாகும்" விளக்குக. (30 புள்ளிகள்)

5. விஜயநகர நாயக்கர் காலத்து இலக்கிய மரபில் சித்தர் பாடல்கள் தனித்துவமானவையாக விளங்குமாற்றை ஆராய்க (30 புள்ளிகள்)

6. புலம்பெயர் இலக்கியங்கள் தமிழ் இலக்கியத்தின் முக்கியமானதொரு பகுதியாகக் கொள்ளப்படுவதற்கான காரணங்கள் பற்றி விபரிக்குக. (30 புள்ளிகள்)